| | | | | | |
|---|---|---|---|---|---|
| MSSRF<br>Science for Sustainable Development | வானிலை சார்ந்த வளோண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | |
| | மாவட்டம் : | சிவகங்கை | காலம் : 05/07/2023 | முதல் | 09/07/2023 |
| | அறிக்கை எண் : | 053/ 2023 | வெளியீட்டு நாள் : | 04/07/2023 | |

### சிவகங்கை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

**பரெம்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 39°-40° சலெ்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24° - 27° சலெ்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.**

| கடந்தவார வானிலை (29.06.2023 முதல் 03.07.2023) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு –09-07-2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 29/06 | 30/06 | 01/07 | 02/07 | 03/07 | தேதி | நாள்-1 05/07 | நாள்-2 06/07 | நாள்-3 07/07 | நாள்-4 08/07 | நாள்-5 09/07 |
| 0.0 | 0.8 | 0.0 | 3.8 | 1.7 | மழை (மி.மீ) | 4 | 6 | 0 | 0 | 3 |
| 40 | 39 | 39 | 40 | 39 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 35 | 34 | 33 | 33 | 32 |
| 27 | 27 | 24 | 27 | 25 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 24 | 23 | 23 | 22 | 22 |
| 5 | 4 | 5 | 5 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 8 | 8 |
| 55 | 52 | 52 | 55 | 69 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 45 | 43 | 34 | 45 | 63 | | 50 | 50 | 50 | 50 | 50 |
| 18 | 13 | 9 | 18 | 11 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 14 | 16 | 8 | 12 | 8 |
| வட மேற்கு | வட மேற்கு | மேற்கு | வட மேற்கு | மேற்கு | காற்றின் திசை | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

### குறுஞ்செய்தி :

**மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூலை 5, 6 மற்றும் 9 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 32°-35° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 22°-24° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 16 கி.மீ வேகத்தில், தென்மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.**

### பொது ஆலோசனை:

### அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (07-13 ஜூலை 2023):

### மழைப்பொழிவு :

07-07-2023 - 13-07-2023: **நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு.**

07-07-2023 - 13-07-2023: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது இயல்பை ஒட்டியே காணப்படும். 28° செல்சியஸ் முதல் 34° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

07-07-2023 - 13-07-2023: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொறுத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 18° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

மாவட்டத்தின் ஓரிரு இடங்களில் ஜூலை 5 மற்றும் 6ம் தேதி இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளது. வயல்களில் ஆடுகளை கிடை அமர்த்துதல் மற்றும் மேய்ச்சலின் போது போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். இந்த காலகட்டத்தில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியே அனுப்பாமல், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும் படியும் கேட்டுகொள்ளப்படுகிறார்கள். இடி மின்னலில் இருந்து தங்கள் கால்நடைகளை பாதுகாக்கும் பொருட்டு கழுத்தில் கட்டியுள்ள உலோக மணிகளை அகற்றிவிடவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : வாழை, நெல், கால்நடை**

**வாழை:**

வாழையில் வேர் கூடையும் நூற்புழு, வேர் அழுகல் நூற்புழு மற்றும் வேர் முடிச்சு நூற்புழுக்கள் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. நூற்புழுக்களின் தாக்குதலால் மரங்கள் வளர்ச்சி குன்றியும், இலையின் ஓரங்களில் மஞ்சள் நிற கோடுகளும், இலைகள் வெளிர் மஞ்சள் நிறமாகியும் காணப்படும். வேர்களில் துரு நிறத்தில் கீறல்கள் மற்றும் சிவப்பு அல்லது கருமை நிற அழுகல்கள் காணப்படும்.

இதனை கட்டுப்படுத்த மரம் ஒன்றுக்கு மக்கிய தொழு உரம் மற்றும் வேப்பம் பிண்ணாக்கு முறையே 10 கிலோ மற்றும் 250 கிராம் இடவேண்டும்.

சணப்பு, கேந்தி போன்றவற்றை ஊடுபயிராகப் பயிரிட்டு பூக்கும் தருணத்தில் மடக்கி உழவேண்டும். ஒரு எக்டருக்கு 2 லிட்டர் சூடோமோனாஸ் திரவத்தை நட்ட 2, 4 மற்றும் 6 வது மாதங்களில் சொட்டுநீர் பாசனத்தின் மூலம் கொடுக்க வேண்டும்.

**நெல்:**

மானாவாரியில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் தரமான விதைகளை விதைப்பதற்கு ஒரு நாள் முன்பாக ஒரு சதவிகித பொட்டாசியம் குளோரைடு கரைசலில் 6 மணி நேரம் ஊற வைத்து பின் நிழலில் 16 மணி நேரம் உலரவிட்டு விதைப்பை மேற்கொள்ளும் பொழுது விதை கடினத் தன்மையுடன் போதுமான ஈரம் மண்ணில் கிடைத்த பின்பு முளைத்து வளரும் தன்மையை பெறும்.

இவ்விதை கடினப்படுத்துதல் நேர்த்தி மூலம் சீரான முளைப்புத் திறனையும், வளர்ச்சியையும் இளம் நாற்றுக்கள் பெறுவதோடு வீரிய நாற்றுகளாக உருவெடுக்கும்.

**கால்நடை:**

ஆட்டுகுட்டிகளின் இறப்பை தவிர்க்கவும் குடற்புழு நீக்கம் செய்வது மிகவும் அவசியமாகும்,

பொதுவாக ஜீலை முதல் செப்டம்பர் மாதங்களில் தட்டைப் புழுக்களுக்கான குடற்புழு நீக்க மருந்துகளை கொடுக்க வேண்டும்,

இதுவரை கொடுக்காதவர்கள் அருகிலுள்ள கால்நடை மருத்துவரை அணுகி தங்களது ஆடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்தினை கொடுக்கவும்.